மதுரையில் வழங்கப்பட்ட குடும்பக் கார்டுகள்

*681 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரிலும், மாவட்டப் பகுதிகளிலும், 1973-ம் வருடம் வழங்கப்பட்ட குடும்பக் கார்டுகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) 1973-ம் வருடத்தில் எத்தனை முறை குடும்பக் கார்டுகள் சோதனை செய்யப்பட்டது ?

(உ) கண்டுபிடிக்கப்பட்ட போலி கார்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : (அ) 1973ஆம் ஆண்டில் மதுரை நகரில் 31,897 குடும்பக் கார்டுகளும், மதுரை மாவட்டத்தின் இதர பகுதிகளில் 1,10,579 குடும்பக் கார்டுகளும் வழங்கப்பட்டன.

(இ) இடத்திற்கேற்ப ஒரு முறை முதற் கொண்டு ஆறு முறை வரை சோதனை செய்யப்பட்டது.

(உ) 16,165.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் போலி குடும்பக் கார்டுகள் எப்படி புழக்கத்திற்கு வந்தன ? யாராவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறுர்களா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : எப்படியோ வந்தது என்று தெரிந்துதான் பிடித்திருக்கிறோம். பிடித்து மீண்டும் அவர்களுக்குக் கொடுக்காமல் செய்ய முடியுமே தவிர நடவடிக்கை எடுக்க முடியாது.

Kerosene seized at Aminjikarai.

*682 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that large quantities of kerosene and petrol were seized from a number of dealers in Aminjikarai area in Madras City around 20th August 1973 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : (அ) & (இ) சென்னை குற்றப்புலனுய்வுத் துறை உணவுப் பொருள் குற்றங்கள் குறித்து புலனுய்வு செய்வதற்கான பிரிவின் காவல்துறை இன்ஸ்பெக்டர், 1973ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17ஆம் நாளன்று சென்னை நகரில் திடீர் சோதனை ஒன்று நடத்தி, தமிழ்நாடு மண்ணெண்ணெய்

கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் எவ்வித உரிமமோ அனுமதியோ இன்றி வணிகரால் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெட்ரோல், மண்ணெண்ணெய் டீசல் ஆகியவற்றைக் கைப்பற்றினர். 6 ட்ரம்களிலும் 40 சிறு டின்களிலும் இருந்த 1,400 லிட்டர் பெட்ரோலும் 2 ட்ரம்களில் இருந்த 360 லிட்டர் டீசலும் 7 ட்ரம்களில் இருந்த 1,190 லிட்டர் மண்ணெண்ணெயும் கைப்பற்றப்பட்டன. இது தொடர்ப்பாக 7 பேர் கைது செய்யப்பட்டனர். அமஞ்சிக்கரை காவல் நிலையத்தில் குற்றவாளிகள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. தற்பொழுது புலனாய்வு முடிந்து நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கைது செய்யப்பட்டவர்கள் பெயிலில் வெளியே வந்து விட்டார்களா ? உள்ளே இருக்கிறார்களா ? இப்படிப் பட்ட குற்றங்கள் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க அரசு வழிவகை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : குற்றவாளிகளைத் தண்டிக்க அந்தந்த செக்ஷன்படி வழக்குப் போட்டிருக்கிறோம். தண்டனை கொடுக்கும் பொறுப்பு நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதிகளைச் சார்ந்தது. சென்னையில் ஒரே நாளில் 102 பேர் பிடிக்கப்பட்டு கேஸ்கள் போடப் பட்டிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் 30 ரூபாய் 40 ரூபாய் அபராதம் போட்டிருக்கிறார்கள். என்ன செக்ஷன்படி வழக்குப் போட முடியுமோ போட்டு தரமான வக்கீல்களைப் போட்டு வழக்குத் தொடர்ந்துள்ளோம். நீதிமன்றத்தின் தீர்ப்புத்தான் முடிவாகும்.

திரு. எம். தேவராசன் : இந்த மாதிரி பதுக்கல்காரர்களை வட மாநிலங்களில் செய்வது போல் விலங்கு மாட்டித் தெருவில் கொண்டு போக அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அரசு அதுபற்றி யோசித்து புதிய சட்டம் கொண்டு வரவேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மண்ணெண்ணெய் விலை ரூ. 1.06 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். பல இடங்களில் இரண்டு ரூபாய் வரை விற்கிறது. வழக்குப் போட்டு அபராதத்தை கட்டிவிட்டு அவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக அவர்களுடைய லைசென்சை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அவர்களை அப்படியே விட்டு விடுவதில்லை. கண்டிப்பாக லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது. அவர்களைக் கண்டு பிடித்து கேஸ் போட்டவுடனேயே லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டு விடுகிறது. இரண்டு ரூபாய் விற்கிறது என்று சொன்னார்கள். எங்கே என்ற விவரத்தைக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். சில இடங்களில் ரூ. 1.02 என்பது திருச்சி போன்ற இடங்களில் போக்குவரத்துச் செலவு எல்லாம் சேர்த்து மேற்கொண்டு 2 பைசா, 5 பைசா சேர்த்து விற்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவரே அதை நிர்ணயிக்கிறார். இரண்டு ரூபாய் என்ற அளவில் எங்கும் நிச்சயமாக இருக்க முடியாது. அப்படி இருப்பவர்களைக் காட்டிக் கொடுக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரி மண்ணெண்ணெய் போன்றவற்றை அதிக விலைக்கு விற்கும்போது அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. யார் யார் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற லிஸ்டை எடுத்து அதை பிளாக் லிஸ்டாக அறிவிக்க வேண்டும் ; அவர்களுக்கு மறுபடியும் லைசென்ஸ் கொடுக்கக் கூடாது. இந்த முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அநேகமாக அவர்களுடைய பெயர்கள் வெளியிடப்படுகின்றன. நிச்சயமாக மீண்டும் லைசென்ஸ் கொடுக்கப்படமாட்டாது.

திரு. கே. என். குமாரசாமி : பதுக்கல்காரர்கள் மீது கேஸ் போட்டால் யாருக்கும் தெரிவதில்லை. யார் சமூக விரோதிகள், பதுக்கல்காரர்கள் என்று கண்டு பிடித்து அவர்களுடைய பெயர்களையும், படங்களையும் வால்போஸ்டர் மூலம் விளம்பரப்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இனிமேல் அதுபற்றி முயற்சி எடுக்கப்படும்.

திரு. எ. சி. நரசிம்மன் : இந்த மாதிரி வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுத்து லைசென்ஸை ரத்து செய்த பிறகு அவர்கள் பெயரால் இல்லாமல் அவர்களுடைய சொந்தக்காரர்கள் பெயரால் லைசென்ஸ் பெற்றிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : சொல்லப்படுகிறது என்று சொல்லுவதை விட இன்னார் என்று தெரிவித்தால் விளக்கம் கூற முடியும்.

Murugan Temple at Pazhamudir Solai.

*683 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there are proposals under consideration to construct a Murugan Temple at Pazhamudir Solai near Madurai ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இந்து சமய அறக்கட்டளை (நிர்வாகத்) துறை ஆணையாளர் இக்கோவிலின் வடிவமைப்பைத் தயாரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார். வடிவமைப்பு முடிவாகத் தயாரிக்கப்பட்ட பிறகு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.